11th August 1954]

MR. SPEAKER :—" In accordance with the regulations framed by me for the holding of elections according to the principle of proportional representation by means of the single transferable vote, I fix 3 p.m., Thursday, the 12th August 1954, as the time within which nomination papers of candidates for election of one member to the Board of Industries should reach the Secretary. Nomination forms can be had on application to the Secretary.

" If the number of candidates nominated exceeds the number of seats to be filled, namely, one, a poll will be taken on Friday, the 13th August 1954, between the hours of 11 a.m. to 1 p.m. and 3 p.m. to 5 p.m."

V.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS DISTRICT BOARDS (SECOND AMENDMENT) BILL, 1954.

* THE HON. SRI S. S. RAMASAMI PADAYACHI :—" Mr. Speaker, I beg leave to move—

' *That the Madras District Boards (Second Amendment) Bill* [a], *1954, be taken into consideration at once.*'

" The ordinary elections to district boards, based on the adult franchise, will be held during the months of September and October 1954. The number of persons contesting the elections will be considerable, and the election campaign and propaganda will be almost unceasing till the last hour of the poll, in which case breaches of peace and disorder may arise. The same elaborate arrangements as for the State Legislative Assembly elections have, therefore, to be made. For the smooth and efficient conduct of these elections, it is considered necessary to prohibit public meetings on the dates of poll and the canvassing of votes in or near the polling stations, to deal with disorderly conduct in or near the polling stations and to empower the Special Officers of District Boards or other specified responsible officials to requisition vehicles, premises, etc., on the lines of the Representation of the People Act, 1951 (Central Act XLIII of 1951). Reasonable compensation will be paid to owners whose vehicles or buildings are so requisitioned.

" The Representation of the People Act, 1951, does not apply to district board elections, and there are no analogous provisions, either under the Madras District Boards Act, 1920, or in the rules for the election of members of district boards framed thereunder. Hence legislation is necessary to make provision in the Madras District Boards Act, 1920, in that regard. I accordingly move that the Madras District Boards (Second Amendment) Bill, 1954, be taken into consideration at once."

MR. SPEAKER :—" Motion moved—

' That the Madras District Boards (Second Amendment) Bill, 1954, be taken into consideration at once.' "

---

[a] Published in the *Fort St. George Gazette*, dated 6th August 1954.

SRI S. RAMALINGAM :—" Sir, I move the following amendment standing in my name :—

'*That the Madras District Boards (Second Amendment) Bill, 1954, be taken into consideration this day six months.*' "

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" I second the amendment, Sir."

MR. SPEAKER :—" Motion moved—

'That the Madras District Boards (Second Amendment) Bill, 1954, be taken into consideration this day six months.' "

SRI K. P. GOPALAN :—" Sir, I move the following amendment standing in my name :—

'*That the Madras District Boards (Second Amendment) Bill, 1954, be circulated to elicit public opinion thereon.*' "

SRI K. V. RAMASWAMY :—" I second the amendment, Sir."

MR. SPEAKER :—" Motion moved—

'That the Madras District Boards (Second Amendment) Bill, 1954, be circulated to elicit public opinion thereon.' "

SRI M. KALYANASUNDRAM :—" Sir, I move the following amendment standing in my name :—

'*That the Madras District Boards (Second Amendment) Bill, 1954, be referred to a Select Committee for the purpose of bringing it into conformity with the Representation of the People Act, 1951.*' "

SRI K. P. GOPALAN :—" I second the amendment, Sir."

MR. SPEAKER :—" Motion moved—

'That the Madras District Boards (Second Amendment) Bill, 1954, be referred to a Select Committee for the purpose of bringing it into conformity with the Representation of the People Act, 1951.' "

12-17 p.m. SRI M. KALYANASUNDRAM :—" கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை எதிர்க்க வேண்டியிருப்பதைக் குறித்து நான் சிறிது வருத்தப்படுகிறேன். இந்த மசோதாவில் இருக்கக்கூடிய விஷயங்களைக் குறித்து ஆட்சேபணை இல்லை. சர்க்கார் சில அதிகாரங்களைக் கேட்கிறார்கள். அவைகளைக் கொடுப்பதற்கு எங்களுக்கு ஆட்சேபணை கிடையாது. ஆனால், அவர்கள் சொல்லக்கூடிய நோக்கம் இருக்கிறதே அதற்கும் அவர்களுடைய செய்கைக்கும் சம்பந்தம் இருக்கிறதா என்று பார்த்தால், அப்படி இல்லை என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியிருக்கிறது.

" தேர்தல் நடக்க இருப்பதால் இந்த மசோதாவின்மீது விவாதத்தை நீடித்துக்கொண்டிருக்க முடியாது ; அப்படியிருக்கும்போது அதை பொறுக்குக் கமிட்டிக்கு விடுவதோ பொதுஜன அபிப்பிராயத்திற்கு

11th August 1954] [Sri M. Kalyanasundram]

விடுவதோ, இன்னும் ஆறு மாதத்திற்கு இதை ஒத்திப்போடுவதோ கூடாது. அப்படிச் செய்தால், தேர்தலுக்குக் குந்தகமாக இருக்கும் என்று சர்க்கார் கட்சியினர் கூறலாம். அவர்களுக்கு இருக்கக்கூடிய சங்கடத்தை நான் உணராமல் இல்லை. இருந்தாலும், இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு, ஆலோசனை செய்தால் நன்றாக இருக்கும். இன்னும் இரண்டே இரண்டு தினங்களில் பொறுக்குக் கமிட்டியின் ஆலோசனையை முடித்துக்கொண்டு, 16-ந்தேதி அன்றைக்கே இந்த மசோதாவை நாம் நிறைவேற்றுவதற்கு முடியும் என்பது என்னுடைய அபிப்ராயம். ஆகவே, நான் சொல்லக்கூடிய ஆட்சேபணைகளைச் சிறிது கூர்ந்து கவனிக்குமாறு மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"ஏன் அந்தமாதிரி நான் சொல்லவேண்டியிருக்கிறதென்றால், மத்தியப் பார்லிமெண்டில் நிறைவேற்றியிருக்கக்கூடிய 1951-வது வருஷத்திய மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்திற்கேற்ப இந்தத் திருத்தங்கள் இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். அது உண்மையா என்றால், இல்லை. சில அம்சங்களில் மட்டும் அதில் இருக்கக்கூடியதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எது சர்க்காருக்கு அனுகூலமாக இருக்குமோ அதையெல்லாம் எடுத்துக்கொண்டு, மக்களுக்கு—வோட்டர்களுக்கு—கொடுக்கக்கூடிய அனுகூலங்களையெல்லாம் இதில் நிராகரித்திருக்கிறார்கள். ஆகவேதான் நான் இதை பலமாக ஆட்சேபிக்கவேண்டியிருக்கிறது.

"வோட்டு போடும் விஷயத்தில் ஒழுங்கீனமான முறையில் நடந்துகொண்டால் அவைகளைத் தடுப்பதற்கு, அதில் இருக்கக்கூடிய திருத்தங்களை ஏற்றுக்கொண்டிருந்தால் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இருக்காது. 1951-வது வருஷத்திய மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்திலுள்ள எல்லா ஷரத்துக்களையும் அப்படியே சேர்த்துக்கொண்டிருப்பார்களேயானால், எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லாமல் மசோதாவை நிறைவேற்றியிருக்கலாம். அதற்கு எங்களுடைய ஆதரவும் கிடைத்திருக்கும். அதற்குப் பதிலாக சில அம்சங்களை மட்டும் எடுத்துக்கொண்டு, தேர்தல் போன்ற ஜீவநாடியாக உள்ள அம்சங்களைக் கைவிட்டு இருப்பதன் நோக்கம் என்ன என்று எங்களுக்குப் புரியவில்லை. ஜனநாயகம் என்பது பேச்சளவிலே இருக்கிறதேயொழிய ஜனநாயக முறையில் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய உரிமைகளை மக்கள் அனுபவிக்கமுடியாத அளவுக்கு இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று—என்னுடைய பொறுப்பு எல்லாவற்றையும் உணர்ந்து—சர்க்கார்மீது குற்றஞ் சாட்டுகிறேன். நடைமுறையும் அதைத்தான் காட்டுகிறது.

"இதற்கு ஒரு உதாரணம் கொடுக்க விரும்புகிறேன். வகுப்புவாதத்தை உபயோகப்படுத்தி, ஜாதி வெறியைக் கிளப்பி வோட்டு சேகரிப்பது தவறு என்று மக்கள் சபையினுடைய சட்டத்தில் இருக்கிறது. அந்த அம்சமானது இந்த மசோதாவில் சேர்த்துக்கொள்ளப்படாமல் கைவிடப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக இவர்கள் தேர்தல் காலத்தில் ஜாதி வெறியையும், இன வெறியையும் கிளப்பிவிட்டு வோட்டு கேட்கக்கூடிய சங்கடம் இருக்கிறது. ஒழுங்கீனமான முறையில் வகுப்புவாத வெறியைத் தூண்டிவிட்டு வோட்டுக் கேட்பது தவறு என்கிற அந்த ஷரத்தை இவர்கள் இந்த மசோதாவில் சேர்க்காமல் இருப்பது எதைக் காட்டுகிறது என்பதைப் பார்க்கவேண்டும். மத்திய பார்லிமெண்ட் இயற்றியுள்ள சட்டத்தில் காணப்படும் இந்த அம்சமானது, இதில் விடப்பட்டிருப்பதால், தேர்தல் காலத்திலே ஒழுங்கீனமான வோட்டு சேகரிக்கும் செயல்களை ஆதரிப்பதுதான் இந்த சர்க்காருடைய கொள்கையாக இருக்கிறது என்று சொல்லவேண்டியிருக்கிறது. அம்மாதிரி ஒழுங்கீனமான காரியங்களைத் தடுப்பதற்குவேண்டிய அந்த ஷரத்தை இந்த மசோதாவில் சேர்ப்பதற்கு அவர்களுக்குத் தைரியம் இல்லை; இஷ்டம் இல்லை. அவற்றையெல்லாம் பேசாமல் விட்டுவிட்டார்கள்.

12–21 p.m. " இன்னும் வோட்டு முறையைப்பற்றி நம்முடைய ராஜ்யத்திலே பலத்த எதிர்ப்பு இருந்துவருகிறது. ஒரு வோட்டு முறையை சர்க்காருக்கு கொடுத்திருக்கக்கூடிய விதி செய்யும் அதிகாரத்திற்கு விட்டு இருப்பது என்ன ஜனநாயகம் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. 1920-வது வருஷத்திய சட்டத்தில் 199-வது விதியின்படி இந்தச் சட்டத்தில் இருக்கக்கூடிய கொள்கைகளுக்கு முரணாகாமல் விதிசெய்வதற்கு சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் நம்முடைய சர்க்கார் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி ஒரு மந்திரி அவர்கள் தங்களுடைய பேனா முனையினால் ஒரு உத்திரவைப் போட்டு வோட்டுமுறையை மாற்றிவிட்டார்கள். எப்படி ஜனநாயக மரியாதையுடையவர்கள் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இதன் விளைவு என்ன ? வயது வந்தோர்களுக்கு வோட்டுரிமை கொடுக்கப்பட்டபோதிலும் கிராமப் பகுதிகளில் நம்முடைய விவசாய மக்கள் பெரும்பான்மையானவர்கள் எழுதப்படிக்கத்தெரியாதவர்களாயிருக்கிறார்கள். சின்னங்களைக்கூட புரிந்துகொண்டு வோட்டுப்போடத்தெரியாத மக்கள் அபேட்சகர்களின் பெயருக்கு எதிரே பாலட் காகிதத்தில் குறிபோடுவது என்பது சுலபமான காரியம் அல்ல. பென்சிலையோ பேனாவையோ சரியாக உபயோகப்படுத்த முடியாத அளவுக்கு நம் நாட்டு சாதாரண மக்களுடைய கல்வி அறிவு இருக்கிறது. இந்த நிலைமையில் பாலட் காகிதத்தில் குறிப்பிட்ட கட்டத்தில் குறிபோடவேண்டும் என்றால் அது எப்படி முடியும் ?

" இந்த சமயத்தில் சபையின் கவனத்திற்கு கொண்டுவருவது என்னவென்றால் முறையை மாற்றியிருப்பதை ஆட்சேபிக்கிறேன். விதியை மாற்றுவதற்கு அவசியம் இல்லை. ஆனால் விதியை மாற்றியிருக்கிறார்கள். இன்னும் தேர்தல் காலத்தில் ஒழுங்கீனமான நடவடிக்கைகள் தேர்தல் குற்றத்தின் கீழ் வரும் என்று சொல்லுகிறார்கள். வண்டிகளை உபயோகித்து வோட்டர்களை கொண்டுவருவது, வாகனங்களை உபயோகித்து வோட்டர்களை வோட்டுசெய்யும்படி நிர்பந்திப்பது ஆகியவை மத்திய சர்க்கார் சட்டப்படி தடைசெய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கு அதைப்பற்றி ஒன்றுமே பேசப்படவில்லை. இந்தியன் பீனல் கோடின் கீழ் குற்றமாக இருந்தால் இதைப்பற்றி வற்புறுத்தியிருக்கமாட்டோம் ; மத்திய பார்லிமெண்டுடைய ஒரு சட்டத்தின் கீழ்தான் இது குற்றமாக கருதப்பட்டிருக்கிறது. அதையும் சேர்த்தால்தான் இந்த திருத்தத்தினுடைய நோக்கமும் மந்திரி அவர்கள் சொல்லும் நோக்கமும் நிறைவேறும். ஆகவே நாங்கள் ஆட்சேபிப்பது காலம் கடத்தவேண்டுமென்பதற்காகவோ மந்திரிசபைக்கு சங்கடத்தை ஏற்படுத்தவேண்டுவதற்காகவோ அல்ல. தேர்தல் இப்பொழுது நடக்காமல் ஒத்திப்போடவேண்டும் என்கிற ஒரு குறுகிய நோக்கத்தோடு இதை நாங்கள் ஆட்சேபிப்பதாக யாரும் நினைக்கவேண்டாம். வேண்டுமானால் கட்சிப்பிரசாரத்திற்கு அவர்கள் அப்படி சொல்லிக்கொள்ளலாம். அதைப்பற்றி எனக்கு ஆட்சேபணையில்லை. ஜில்லா போர்டுகளுக்கு தேர்தல் நடைபெறவேண்டுமென்று இதற்கு முன்னதாகவே நாங்கள் வற்புறுத்தியிருக்கிறோம். தேர்தல் சீக்கிரம் நடைபெறவேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கம். சர்க்கார் தேர்தலை சீக்கிரம் நடத்துவதற்கு நாங்கள் எந்த விதமான இடையூறு செய்வதற்கும் தயாராயில்லை. இருந்தாலும் தேர்தல் சீக்கிரமாக நடைபெறவேண்டுமென்ற அவசரத்தையொட்டி ஜனநாயக உரிமைகளை பறிக்கக்கூடிய முறையிருக்கிறதே, அதை அனுமதிக்கமுடியாது என்று தெரிவித்துக்கொண்டு இந்த மசோதாவை நாங்கள் பலமாக எதிர்க்கிறோம். அதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்ற யோசனையை மந்திரி அவர்கள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

MR. SPEAKER :—" There is a mistake in the order of business. The Hon. Minister Sri Parameswaran should have moved the motion standing in his name first. He may do so now and we will continue the discussion of the Madras District Boards (Second Amendment) Bill afterwards."